**sns academy**

**an International CBSE Finger Print School**
**Coimbatore**

## மாதிரிக் கடிதம்

**உங்கள் ஊருக்கு சாலை வசதி வேண்டி நெடுஞ்சாலைத்துறை துணை செயற்பொறியாளருக்கு கடிதம் எழுதுக:**

**உம் முகவரி:**

**ச. இலக்கியன் / ச. இலக்கியா**

**ஆதிக்காடு கிராமம்,**

**கொல்லிமலை,**

**நாமக்கல் - 637406.**

## அலுவலகக் கடிதம்

அனுப்புநர்:

ச. இலக்கியன்,

ஆதிக்காடு கிராமம்,

கொல்லிமலை,

நாமக்கல் - 637406.

பெறுநர் :

நெடுஞ்சாலைத்துறை துணை செயற்பொறியாளர் அவர்கள்,

நெடுஞ்சாலைத்துறை அலுவலகம்,

நாமக்கல் - 637408.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : சாலை வசதி பெறுதல் தொடர்பாக.

வணக்கம், நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எங்கள் ஊரில் சுமார் 2500 மக்கள் வசித்து வருகின்றனர். ஆனால் எங்கள் மலைக்கிராமத்தில் முறையான தார்ச்சாலை இல்லை.

மண்சாலைகளையே மக்கள் பயன்படுத்துகின்றனர். மழைக்காலத்தில் அவசரத்திற்கு நகரப்பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளுக்குச் செல்லும்போது மிகுந்த இன்னல்களை எதிர் கொள்கிறோம். குறிப்பாக முதியோர்கள், கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் சிரமப்படுகிறார்கள். எனவே எங்கள் ஊர் மக்களின் நலன் கருதி முறையான சாலை வசதிகளை அமைத்துத் தர தாங்கள் ஆவன செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி!

இடம்: பூம்பாறை, இப்படிக்கு

தேதி: 07.07.2025 தங்கள் உண்மையுள்ள

ச. இலக்கியன்

உறை மேல் முகவரி:

பெறுநர்:

நெடுஞ்சாலைத்துறை துணை செயற்பொறியாளர் அவர்கள்,

நெடுஞ்சாலைத்துறை அலுவலகம்,

நாமக்கல் - 637408.

**நீட் தேர்வில் வெற்றி பெற்று மருத்துவக் கல்லூரியில் இணையும் உன் சகோதரிக்குக் கடிதம் எழுதுக:**

**உறவுமுறைக் கடிதம்**

ஆதிக்காடு கிராமம்,
கொல்லிமலை,
நாமக்கல் - 637406.
07.07.2025

அன்புள்ள அக்காவிற்கு,

நான் இங்கு நலம், உன் நலம் அறிய ஆவல். கடந்த ஆண்டு வரை நாம் இருவரும் நம் அழகிய கிராமத்தில் கோவில், ஏரி, வயல் காடுகளில் மகிழ்ச்சியாக சுற்றித் திரிந்தோம். நீ எனக்கு நீச்சல் கற்றுக் கொடுத்தது, சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொடுத்தது, திருவிழாக் காலங்களில் நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகள் கண்டு மகிழ்ந்த ஒவ்வொன்றும் மனதில் அழகான நினைவுகளாக பதிந்துள்ளது. நீ நீட் தேர்வில் வெற்றி பெற்று மருத்துவக் கல்லூரியில் இணைந்தது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. நம் பெற்றோரும் நிம்மதியில் திளைக்கிறார்கள். நீ நல்ல முறையில் பயின்று எதிர்காலத்தில் நல்ல மருத்துவராக வலம் வந்து ஏழைகளுக்கு துணை புரிய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என் கனவு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிய வேண்டும் என்பதே அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறேன். நீ விடுமுறையில் மீண்டும் எப்பொழுது வருவாய் என பதில் கடிதம் போடு. உன் வருகைக்காகக் காத்திருக்கும் அன்புத் தம்பி…….

உறைமேல் முகவரி

பெறுநர்:

கதிரவன்,
18, வடக்குப்பேட்டை,

சேலம்.

இப்படிக்கு

அன்புத் தம்பி

இலக்கியன்.